

கன்னியாகுமரி மாவட்ட நீதிபதி (பொ) திரு. ஆர்.டி.சந்தோஸன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்
ஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், நாகர்கோவில், வசந்தம் மருத்துவமனை பின்புறத்தி
ளில் சீமைக்கருவேல் மரங்கள் அகற்றப்பட்டதை இன்று (25.02.2017) நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு

செ.வெ.எண்: 140/2017 நாள்: 25.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட நீதிபதி (பொ) திரு. ஆர்.டி.சந்தோஸன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், சீமைக்கருவேல் மரங்களை அகற்றப்பட்ட இடங்களை இன்று (25.02.2017) நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தமிழகத்தில் உள்ள நீர்நிலைகள், பாசன வாய்க்கால்கள், சாலையோரங்கள் மற்றும் தனியார் நிலங்களில் இயற்கையாகவே வளர்ந்து வரும் சீமைக்கருவேல் மரங்கள் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிப்பதாகவும், அவற்றை அகற்றிட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்த வழக்கு W.P.16485/2015, 16645/2015 ஆகிய தீர்ப்புரையில் 10.02.17-ம் நாள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பின்வருமாறு ஆலோசனைகள் வழங்கியுள்ளது. 1) அரசு நிலங்களில் உள்ள சீமைக்கருவேல் மரங்களை அகற்றிட சம்பந்தப்பட்ட துறைகள் நடவடிக்கை மேற்கொண்டு சீமைக்கருவேல் மரங்களை வேருடன் அகற்றிட வேண்டும். இம்மரங்கள் தானாகவே வளரக் கூடியவை என்பதாலும், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதாலும், சுகாதார பாதிப்புகள் உண்டாக்குவதாலும் பட்டாதாரர்கள் தங்கள் நிலங்களில் வளரும் சீமைக்கருவேல் மரங்களை வேரூடன் அகற்றிட வேண்டும் எனவும் பொது மக்களுக்கு இதனை விளம்பரப்படுத்துமாறும் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பட்டாதாரர்கள் அவர்களுடைய நிலங்களில் சீமைக்கருவேல் மரங்கள் வளர்ந்திருந்தால், அவற்றை வேருடன் வெட்டி அப்புறப்படுத்துமாறு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இன்று மாவட்ட நீதிபதி (பொ) திரு. ஆர்.டி.சந்தோஸன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், நாகர்கோவில், வசந்தம் மருத்துவமனை பின்புறம், சொகுசு பேரூந்து நிலையம் அருகில் மற்றும் உடுப்பி இண்டர்நேஷனல் ஹோட்டல் அருகில், ஆகிய இடங்களில் சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டதை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. அருளரசு, நாகர்கோவில், நகரமைப்பு அலுவலர் (பொ) திரு. ஹெவின்ஜாய், வருவாய்த்துறை மற்றும் நகராட்சி ஊழியர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.